மாநகராட்சி மன்ற 10-5-1993 யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 27 திங்கட்கிழமை (10-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 163

# லலித், பிரேமா கொலைகள்; புலிகள் மீது குற்றச்சாட்டு

## பொலீஸார் சுமத்துகின்றனர்

கொழும்பு, மே 10

ஜனாதிபதி பிரேமதாசா மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலி ஆகியோரின் கொலைகளுக்குப் பின்னால் விடுதலைப் புலிகள் இயக்கம் இருப்பதாக பாதுகாப்பு மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் இந்த விடயம் தொடர்பாக புலிகள் மீது குற்றம் சுமத்தும் செய்திகளை வெளியிட்டன.

அரசு சார்பு பத்திரிகையான ''தினகரன்'' வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த நாட்டில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்க விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள நாச எண்ணங்கொண்ட ஒரு சதியையே இக் கொலைகள் அம்பலப்படுத்துகின்றன என்று தேசிய பாதுகாப்பு விஷயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்துக் கொண்டுள்ளனர்.

இரண்டு கொலைகளிலுமே ஒரே விதமான சான்று அடையாளங்கள்காணப்படுகின்றன. இக் கொலைகளின் விளைவாகக் கொழும்பில் வன்செயல்கள் தொடர்ந்திருப்பின் விடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொலையாளிகள் இருவரும் வடபகுதித் தமிழர்களாம்

கொழும்பு, மே 10

ஜனாதிபதி பிரேமதாஸா மற்றும் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகியோரைக் கொலை செய்தவர்கள் அடையாளம் காணப்பட்டுவிட்டனர் என்று குற்றப் புலனாய்வுப் பணியகம் அறிவித்துள்ளது.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவைப் படுகொலை செய்த நபர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த குலவீரசிங்கம் வீரகுமார் (23 வயது) என்றும் —

லலித் அத்துலத் முதலியை கொலை செய்தவர் சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தையா ரகுநாதன் என்றும் குற்றப் புலனாய்வுப் பணியக இயக்குநரான எஸ். பி. லயனல் குணதிலக தெரிவித்துள்ளார்.

இருவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் மேலும் சொன்னார். (உ-எ-6)

### விசாரணை நடப்பதால்

## புலிகள் மீது குற்றம் சுமத்த புதிய ஜனாதிபதி மறுப்பு

கொழும்பு, மே 10

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று நேரடியாகக் குற்றஞ்சாட்ட ஜனாதிபதி விஜேதுங்க மறுத்து விட்டார்

இத்தகவலை வெரித்தாஸ் வானொலி வெளியிட்டது.

விசாரணை முடியாமல், விடுதலைப் புலிகள் தான் காரணம் என்று எப்படிக் கூறமுடியும் என ஜனாதிபதி விஜேதுங்க கேள்வி எழுப்பினார் என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## கிளாலிப் படகு உரிமையாளர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 10

கிளாலி—பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று (திங்கட்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு கிளாலிப் படகுத்துறையில் நடைபெறவிருக்கிறது.

சகல படகு உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு நிதித்துறையின் வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-3)

### கண்டி ஜனாதிபதி மாளிகையில்

## புதிய ஜனாதிபதி, பிரதமரை ஜே. ஆர். சந்தித்துப் பேச்சு!

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேற்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் சந்தித்துப் பேசினார் என்று அறிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பு கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்றுக் காலை இடம் பெற்றது.

திரு. விஜேதுங்காவும், திரு. ரணில் விக்கிரமசிங்காவும் கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று தங்கியிருந்தனர். அச்சமயம் திரு. ஜெயவர்த்தனா அங்கு சென்று இவர்கள் இருவரையும் சந்தித்துப் பேசினார் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

பேச்சின் விவரம் ஏதும் வெளியிடப்படவில்லை.

இச்சந்திப்புக்கு முன்னர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் நேற்று கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடு நடத்தினார்கள்.

புனித சின்னங்களைத் தரிசித்த பின்னர் இரு தலைவர்களும் மல்வத்தை, அஸ்கிரிய ஆகிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சட்டமா அதிபர் திலக் மாரப்பன, இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள்.

### தற்காலிக ஊழியர் நிரந்தரமாவர்

## அரச ஊழியர்கள் சகலருக்கும் மேலதிக அலவன்ஸ் கிடைக்கும்

### ஓய்வூதியருக்கு 260 ரூபா

கொழும்பு, மே 10

★ சேவையிலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு மேலதிக அலவன்ஸ் வழங்குவதில் உள்ள முரண்பாடுகள் நீக்கப்படும்.

★ அதேவேளை ஓய்வூதியம் பெறுவோருக்கு அடுத்த மாதம் தொடக்கம் 260 ரூபா வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் வழங்கப்படும்.

★ தற்காலிக அரச ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

— புதிய ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா அறிவித்துள்ள ஊக்குவிப்புச் சலுகைகள் நிவாரணங்கள் வழங்கும் திட்டத்தில் மேற்கண்ட மூன்றும் அடங்கும்.

ஒய்வூதியம் பெறும் சகலருக்கும் வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் 260 ரூபாவை வழங்குமாறு ஜனாதிபதி திறைசேரியைப் பணித்துள்ளார்.

அடுத்த மாதம் முதலாம் [illegible]

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 10

இதுவரை மீட்பு நிதியைச் செலுத்தத் தவறியவர்கள் நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் நாளை மறுதினம் புதன் மாலை 3 மணி தொடக்கம் 4 மணி வரையும் செலுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது (ஒ)

### கொழும்பிலும் ஏனைய இடங்களிலும்

## விசேட பாதுகாப்பு ஏற்பாடு தொடர்ந்து இருக்கும்

கொழும்பு, மே 10

தென்னிலங்கையில் — குறிப்பாக கொழும்பில் தற்போது நடைமுறையில் இருக்கும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து பேணப்பட்டு வரும் என்று அறிவிக்கப்படுகிறது.

நிலைமையை அவதானித்தே தற்போதைய பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தளர்த்துவது குறித்து ஆலோசிக்கப்படும் என்று கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கம்மன தெரிவித்தார்.

சந்தேகத்துக்கு இடமான முறையில் கூட்டம் கூடுவோர் மீதும் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில் நடந்து கொள்வோர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறும் பொலீஸாருக்கும் படையினருக்கும் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார். (ஒ-எ)

### பிரேமா கொலையை அறிந்து

## வெளிநாட்டில் இலங்கையர் மென்பானம் வழங்கி மகிழ்ச்சி

கொழும்பு, மே 10

பிரேமதாஸா கொலையுண்ட செய்தி கேட்டதும் ஐக்கிய அரபு எமிரேற்ஸில் உள்ள இலங்கையர்கள் பெப்சிக்கோலா, கொக்காகோலா பானங்களை ஏனையோருக்கு வழங்கிக் கொண்டாடினர்.

''லக்திவ'' பத்திரிகை இணை ஆசிரியர் வினிவெஹற்றிகொடே பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டுத் தலைவர் இறந்ததற்காக மக்கள் மகிழ்ச்சியடைந்தது இரண்டு தடவைகள் நிகழ்ந்தன.

முதலாவது இந்திரா காந்தி கொலையுண்ட போது நிகழ்ந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஹேமா விருப்பம்?

கொழும்பு, மே 10

எதிர்வரும் மாகாணசபை தேர்தலுக்குப் பின்னர் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி, 1994 டிசம்பரில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலுக்கான தமது வேட்பாளர் யார் என்பதை முடிவு செய்யவுள்ளது.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக வரும் முயற்சியில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவியான 57 வயதான ஹேமா பிரேமதாஸா ஈடுபடலாம் எனத் தெரிவதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

முழு அளவில் அரசியலில் பிரவேசிக்க ஹேமா பிரேமதாஸா முடிவு செய்திருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைகள் ஊகங்களை வெளியிட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## ஈழத்தமிழர்கள் கனடாவில் தொடர்ந்து கோஷ்டி மோதல்

ஒட்டாவா, மே 10

கனடாவில் இலங்கைத் தமிழர்களுக்கு இடையே கோஷ்டி மோதல்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோதல்களை நிறுத்த அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் ஒத்துழைக்கவேண்டும். என்று கனேடியப் பொலீஸார் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை ரொறொன்ரோ மாநிலத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களை அழைத்து பொலீஸார் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

''இலங்கைத் தமிழர்கள் தங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர்கள் மீது சுவிஸிலும் கண்காணிப்பு

ஜெனிவா, மே 10

சுவிற்சர்லாந்தில் உள்ள இலங்கைத் தமிழர் சுவிஸ் பொலீஸாரின் கண்காணிப்புக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 14ஆம் திகதி புங்குடுதீவைச் சேர்ந்த 26 வயதான குமாரசாமி கிரிதரன் கொலை செய்யப்பட்டார்.

சூரிச் நகரில் இடம்பெற்ற அந்தக் கொலைச்சம்பவத்தின் போது குமாரசாமி கிரிதரனின் உடலை கார் டிக்கி ஒன்றுக்குள் இருந்து சுவிஸ் பொலீஸார் மீட்டெடுத்தனர்.

இக்கொலை தொடர்பாக இலங்கைத் தமிழர் மூவர் கைதுசெய்யப்பட்டனர். இக்கொலை சம்பவத்தைத் தொடர்ந்து அந்த நாட்டில் சட்டம் -- ஒழுங்கு பேணப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு சுவிஸ் பொலீஸார் அங்குள்ள இலங்கைத் தமிழர்களைத் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகளும், உயர் ரக அல்சேஷன் நாய்க்குட்டிகளும் (கறுப்பு) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (25569)

வர்ண, கறுப்பு, வெள்ளை படச்சுருள்கள், கறுப்பு வெள்ளை படப் பிரதியாக்கத்திற்கான பிரதித்தாள்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளுங்கள். K. S. R. Photos, 766, K. K. S. Road, Thaddatheru Junction. (25592)

### பெயர் மாற்றம்

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் கணேசலிங்கம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25537)

## அரச ஊழியர்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதியில் இருந்து இது அமுலுக்கு வரும். இதனால் 3 லட்சத்து 20 ஆயிரம் ஓய்வூதியர்கள் நன்மை அடைவார்கள்.

சேவையில் உள்ள அரச ஊழியர்களுக்கு மேலதிக அலவன்ஸாக 200 ரூபாவும், 300 ரூபாவும் வழங்கப்படுவதால் எழுந்துள்ள முரண்பாடுகளை நீக்குவதற்கு திறைசேரிக்குத் தாம் உத்தரவிட இருப்பதாகவும் அவர் கூறினார்.

சம்பள உச்ச வரம்பு காரணமாக இந்த அலவன்ஸ் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ள சகல அரசு ஊழியர்களும் கூட்டுத்தாபன ஊழியர்களும் இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் திகதியில் இருந்து இதனைப் பெற்றுக்கொள்ள உள்ளனர்.

இதன் காரணமாக 30 ஆயிரம் ஊழியர் நன்மை அடைவார்கள்.

### நிலுவை இல்லை

எனினும் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக இந்த நிலுவைப் பணம் கொடுக்கப்பட மாட்டாது — என்றும் அவர் சொன்னார்.

பாதுகாப்புச் செலவுகளுக்காக 2 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

### நிரந்தரமாவர்

1992 ஏப்ரல் 1 ஆம் திகதிக்கு முன்னர் சமயாசமய அடிப்படையில் அல்லது தற்காலிக அடிப்படையில் சிற்றூழியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு தற்போது சேவையாற்றுபவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார்.

திணைக்களங்கள், அமைச்சுகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் உத்தரங்களுக்கு வெற்றிடங்கள் இருந்தால், நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்.

### ஆட்சேர்ப்பில் மாற்றம்

எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த தரங்களில் உள்ள சேவைக்கு ஆட்களைத் திரட்டும தற்போதைய திட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்படும்.

பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்தும் திட்டம் மாற்றி அமைக்கப்படும்.

### பட்டதாரிகளுக்கு வேலைப் பயிற்சி

பல்கலைக் கழகங்களை அரச, தனியார்துறை நிறுவனங்களுடன் இணைத்து அவற்றின் மனித சக்தித் தேவைகளுக்கு பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும பட்டதாரிகளைப் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும். பட்டதாரி மாணவருக்கு வேலைப் பயிற்சி அளிக்கும்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

இவற்றுடன் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் சில திட்டங்களையும் ஜனாதிபதி நேற்று அறிவித்தார். [அ-எ]

---

சிரணி ஸ்ரீநாகபூஷணி அம்பாள் இந்து இளைஞர் மன்ற

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு இல. 0431, 2ஆம் பரிசு இல. 0694, 3ஆம் பரிசு இல. 0381, 4ஆம் பரிசு இல. 1353, 5ஆம் பரிசு இல. 0670.

10 ஆறுதல் பரிசுகள்: இலக்கங்கள்:
2465, 0017, 2903, 1498 1068,
0483, 2135, 2002, 0769, 1821.

இப் பரிசுகளை 25 — 05 — 1993 க்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

- நிர்வாகம்.

(25596)

---

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 25 — 03 — 1925

அஸ்தமனம்: 11 — 05 — 1987

அமரர்

### மரியாம்பிள்ளை சிமியாம்பிள்ளை

(முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்)

''நீங்காத நினைவலைகள்
நெஞ்சை மூத்தமிட
தாங்காது எம் விழிகள்
தாம் கரைந்து அழுகின்ற
நீங்கள் துயில் கொண்டு
நிறைந்தது ஆறு ஆண்டு
நாங்கள் துயில் கொண்டு
நமதாவி போகும் வரை
தூங்காது உங்கள் நினைவு
துடித்திருக்கும் எங்கள்
இதயம் போல்''

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக யாழ். மரி அன்னை பேராலயத்தில் நாளை 11-05-1993 காலை 6.15இற்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

- குடும்பத்தினர்.

56, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை. (6158)

---

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 07 — 12 — 1945

உதிர்வு: 19 — 04 — 1976

செல்வன்

### சோமசுந்தரம் குணசேகரம்

(குணம்)

திதி: 10 — 05 — 1993

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, எம்மை ஆறாத் துயரில் விட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத்தெய்வமே! எத்தனை ஆண்டுகள் சென்றாலும், உம் நினைவு எம் நெஞ்சை விட்டகலா.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாய், சகோதரர்கள், மச்சான்மார், பெறாமக்கள் ஜெயந்தி, கீர்த்திகரன், வசந்தி, சொப்பனா, நிந்துஜா, ஜோதிகா.

அறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (25599)

---

## திருநெல்வேலி சிவன்கோவில் மகோற்சவ கால பேருரைகள்

திருநெல்வேலி சிவசக்தி இந்து இளைஞர் மன்ற ஆதரவில் இடம்பெறும்

பொருள் : பெரியபுராணம்

நிகழ்த்துபவர்: திரு. த. சிவகுமாரன் அவர்கள் (ஆசிரியர், யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)

10 தினங்களும் இரவு 7.00 மணிக்கு

| காலம் | விடயம் |
|---|---|
| 10 - 05 - 93 | தெய்வப் புலவரின் திருவாக்கு |
| 11 - 05 - 93 | தம்பிரான் தோழன் |
| 12 - 05 - 93 | தன்னேரில் மாரன் |
| 13 - 05 - 93 | வென்ற ஐம்புலனால் மிக்கார் |
| 14 - 05 - 93 | தொழுது வென்றார் |
| 15 - 05 - 93 | அன்புடைத் தோன்றல் |
| 16 - 05 - 93 | மகவரிந்த மாண்பு |
| 17 - 05 - 93 | அறிவினால் ஆவதுண்டோ? |
| 18 - 05 - 93 | அண்டர் நாயகனின் அம்மை |
| 19 - 05 - 93 | இரவில் பூத்த இளந் தாமரை |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவசக்தி இந்து இளைஞர் மன்றம்

சிறப்புற வாழ்த்துவோர்:

குறிஞ்சி மெடிக்கல்ஸ்
பரமேஸ்வராச் சந்தி

(25600)

---

புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்

## வாக்காளர் பட்டியல் - 31-03-1993

எமது சங்கத்தின் 31-03-1993 வரையிலான வாக்காளர் பட்டியல்கள் பின்வரும் கிளைகளில் 11-05-93 தொடக்கம் 20-05-93 வரை அங்கத்தவர்களின் பார்வைக்காக வைக்கப்படும். இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலம் 21-05-93 தொடக்கம் 31-05-93 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ ''செயலாளர், புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம், 201/1, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விவரம்:

கிளை இல. 1, 2, 6, 7, 12, 13, 14, 15, 16 — ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை இல. 3, 5 — இல. 15, சிறாம்பியடிவீதி, மணியங்கட்டடம், யாழ்ப்பாணம்.

கிளை இல. 9 — இல. 147, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை இல. 10 — இல. 174, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

கிளை இல. 19, 20 — இல. 201/1, 3ஆம் குறுக்குத் தெரு. - தலைமைக்காரியாலயம், யாழ்ப்பாணம்.

செயலாளர். தலைவர்.

(சி-5107)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 04 — 10 — 1902

மறைவு: 11 — 04 — 1993

திருமதி

### செல்லம்மா சுந்தரம்பிள்ளை

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசவிளக்காய் பலரும் வாழ்த்திட
எங்கள் குலவிளக்கே! எம்மை மறந்து
எங்குதான் சென்றீர்களம்மா!

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய். (6160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மீண்டும் ஜே. ஆர்! - (1)

இனப்பிரச்சினையை இலங்கை-இந்திய (ஜே. ஆர்-ராஜீவ்) ஒப்பந்தத்தின் பிரகாரமே தீர்க்க வேண்டும். இப்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பை மீறிப் புதிய ஜனாதிபதியோ அரசாங்கமோ செயற்படலாகாது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், ஒப்பந்தத்தின் பெற்றோரில் ஒருவருமான ஜே. ஆர். ஜெயவர்த்தனா கருத்து வெளியிட்டிருக்கிறார். அவரது இந்தக் கருத்து, இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் வேறு எந்த முயற்சியிலும் புதிய ஜனாதிபதி விஜேதுங்கா ஈடுபடக்கூடாது என்று எச்சரிக்கும் தொனியிலும் அமைந்துள்ளது.

இலங்கையின் இப்போதைய அரசமைப்புச் சட்டத்தின் சிருஷ்டிகர்த்தா - பிரம்மா - ஜே ஆர். ஜெயவர்த்தனாவே. அது முழுக்க முழுக்க அவரது சொந்த நலனையும், தன்னைச் சார்ந்த சிங்கள உயர் கூட்டத்தின் நலனையும் முன்நிறுத்தி உருவாக்கப்பட்டதே சனநாயகம் என்ற பெயரில். எதேச்சாதிகாரத்துக்கும் தனிநபர் ஏகாதிபத்தியத்துக்கும் சட்டவடிவம் கொடுக்கப்பட்டதே 1978 அரசமைப்புச் சட்டம். அதில் உள்ள குறைபாடுகளோ, அதனால் மக்களுக்கு உண்டாகும் பாதிப்புகளோ நிச்சயமாக ஜே. ஆருக்கு விளங்காது. அந்த விளங்காத் தன்மைக்குக் காரணமும் உண்டு.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு தான். குஞ்சு உண்மையிலேயே கறுப்பு நிறம் என்று சிறகை வெட்டி பூதக் கண்ணாடியில் வைத்துக்காட்டினாலும் காகம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அது போலவே தானே பிரம்மனாக இருந்து படைத்த அரசமைப்புச் சட்டத்திலும், தானே தாயாக இருந்து பெற்றெடுத்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலும் உள்ள குறைபாடுகளை எவ்வளவுதான் நுணுக்கமாக எடுத்துக்காட்டினாலும், புட்டுப் புகட்டினாலும் அவற்றை ஜே ஆர். ஏற்றுக்கொள்ளப் போவதில்லை!

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளை தனக்கு அடுத்த அதிகாரக் கதிரையில் பிரதமராக இருந்த பிரேமதாசா ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை. ஜனாதிபதியாக வந்த பின்னர் பிரேமதாசா அதனை வெளிப்படையாகவே கூறினார். ஆகையால் பிரேமதாசா உயிருடன் இருக்கும் வரைக்கும் இனப்பிரச்சினைக்கு இலங்கை-இந்திய ஒப்பந்தமே தீர்வு என்று கூறும் திராணியும், துணிச்சலும், அதிகாரமும் ஜே. ஆரிடம் இருக்கவில்லை.

இப்போது, பிரேமதாசா இறந்த எட்டாம் நாள், இலங்கை - இந்திய ஒப்பந்தப் பிரகாரமே இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கூறி, தான் கதிரையில் அமர்த்திய விஜேதுங்காவை வெளிப்படையாக எச்சரிக்கிறார்

மேடையின் நின்று கலைத்துவத்துடனும், கனகச்சிதமாகவும் ஆடும் பொம்மையை திரைக்கு பின்னால் நின்று நூலை இழுத்து ஆட்டுவிப்பவன் பொம்மைக்காரனே. அவனது கையிலேயே நூல் உண்டு. அதனால் தான் நினைத்த வண்ணம் பொம்மையை ஆட்டுவிக்கலாம்.

அதுபோல பாவம் விஜேதுங்கா வெறும் பொம்மை அவரை மேடைக்கு கொண்டு வந்தவரும், பின்னால் இருந்து, நூலை இழுத்து ஆட்டுவிப்பவரும் ஜே ஆர். ஜெயவர்த்தனாவே, அதனால் தான் கடந்த ஐம்பத்திரண்டு மாதங்களாக இல்லாத துணிவும் தெம்பும் அவருக்கு பிறந்திருக்கின்றன. அதிகாரம் திரைமறைவில் அவர் கையிலே இருப்பதால் அவர் இதனையும் சொல்வார் இன்னமும் சொல்வார்! ஏன் செய்விக்கவும் துணிவார்!

எப்படியோ, தமிழர் பிரச்சினை சம்பந்தமாக புதிய காட்சி ஒன்றை மேடையேற்ற அவர் முனைந்திருக்கிறார்! அதில் சந்தேகம் இல்லையல்லவா?

## தமிழ் நாட்டில்

# 7 இலங்கைத் தமிழர்கள் சிறைகளிலிருந்து தப்பினர்

சென்னை, மே 10

தமிழ்நாடு - காஞ்சிபுரம் சிறைச்சாலையில் விசேட முகாம் ஒன்றில் காவலில்வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்களில் ஐந்து பேர் நேற்று முன்தினம் (சனி) பிற்பகல் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஒவ்வொருவராக பின்புற மதில்மீது ஏறிக் குதித்துத் தப்பி ஓடியதாகத் தெரிகிறது என்று இந்திய வானொலி அறிவித்தது.

தமிழ் நாட்டில் பதிவு செய்யாமல் தங்கியிருந்த இலங்கைத்தமிழர்கள் இந்த விசேட முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த முகாம் தமிழ்நாடு சிறப்புப் பொலீஸ்படையினரால் காவல் செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை —

மதுரை மாவட்டம் வேலூர் விசேட அகதிமுகாமில் இருந்து நேற்று அதிகாலை இரண்டு இலங்கைத் தமிழ் அகதிகள் தப்பிச் சென்றுவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

மண்டபம் மற்றும் இராமநாதபுரத்தில் உள்ள விசேட முகாம்களில் தங்கி இருந்த இவர்கள் இருவரும் முறையான பாஸ்போட்டுகள் இல்லாததால் கைது செய்யப்பட்டு, வேலூர் முகாமில் வைக்கப்பட்டிருந்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். (உ-த-எ)

# நீர்கொழும்பு முகாமிலிருந்து தமிழ் இளைஞர் தப்பினார்!

கொழும்பு, மே 10

நீர்கொழும்பு பொலீஸ் நிலையத் தடுப்பு முகாமில் இருந்து தப்பிச் சென்ற கரவெட்டியைச் சேர்ந்த சிவக்கொழுந்து அழகன் என்ற இளைஞரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட இந்த இளைஞரைப் பொலீஸார் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருந்தனர். (த-எ)

# தமிழகத்தில் 8 இலங்கையரும் 9 கடத்தல்காரரும் கைது!

சென்னை, மே 10

தமிழ்நாடு — நாகபட்டினம் மாவட்டத்தில் இலங்கையைச் சேர்ந்த எட்டுப் பேரும் கடத்தல்காரர்கள் ஒன்பது பேரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 13லட்சம் ரூபா பெறுமதியான பெற்றோல், டீஸல் மற்றும் ஒட்டோ உதிரிப்பாகங்கள் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

சென்ற ஒருவார காலத்தில் கடலோர மாவட்டத்தில் பொலீஸார் மேற்கொண்ட பல்வேறு சோதனைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது; (த-எ)

## வடக்கு - கிழக்கு

# மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள் யாழ். விஜயம்

திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இவ்வதிகாரிகள் குழு யாழ்ப்பாணத்தில் உள்ள பல பாடசாலைகளுக்கும் விஜயம் செய்து அங்கு காணப்படும் பௌதீக வசதிகள், குறைபாடுகள் மற்றும் கடந்த கால பரீட்சை பெறுபேறுகள் ஆகியவை பற்றி கேட்டறிந்து தகவல்கள் சேகரித்து வருகின்றனர்

வடக்கு கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி த. பெரியதம்பி, மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. எஸ் கமலநாதன், நிர்வாக உத்தியோகத்தர் திரு ஏ கே சண்முகநாதன் உட்பட பல உயரதிகாரிகள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். (த-152)

# காமினியின் கட்சியினர் ஐ.தே.கவில் சேர முயற்சி?

கொழும்பு, மே 10

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் பின் கதவால ஐக்கிய தேசியக் கட்சியில் சேர முனைகின்றனர்

இவ்வாறு அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள தினகரன் நேற்று செய்தி ஒன்றை வெளியிட்டது

தலைமையற்ற நிலையில் உள்ள இம் முன்னணியினர், மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் என்பதனால் விரக்தியடைந்துள்ளனர் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

# விளையாட்டு நிகழ்வுகள்

''உதயன்'' ஆதரவில் யாழ் மிட் ரவுண் றோட்டறக்ட் கழகம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 00 மணி: சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி

★ மாலை 4 மணி:- ஷப்றா அணி எதிர் ஜொனியன்ஸ் சிவப்பு அணி.

o o o

யாழ். ஆஸ்பத்திரி வீதி ஐங்கரன் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கிப்ஸ் வி. க. [illegible] எதிர்த்து ஐங்கரன் வி. க. நீல அணி மோதும்.

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் ஸ்ரீ முருகன் மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ காங்கேசன் யங்றோயல் எதிர் புத்தூர் விக்னேஸ்வரா

★ புத்தூர் எவரெஸ்ட் எதிர் மயிலங்காடு ஸ்ரீ முருகன். (உ)

o o o

அரியாலை சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர் சு. தியாகராஜா ஞாபகார்த்தமாக நடத்தப்படும் ஏழுபேர் கொண்ட அணிகளுக்கிடையிலான விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்று [illegible] மாலை சனசமூக நிலைய [illegible]

# நாளையே 'வாதுவ' புறப்படும்

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''வாதுவ'' கப்பலில் இருந்து மா இறக்கும் பணி முடிவுறாததால் அக்கப்பல் இன்று புறப்படாது. அது நாளையே கொழும்பு நோக்கிப் புறப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது

வாதுவ கப்பலில் மேலும் 749 மெற்றிக் தொன் மா இறக்க வேண்டியுள்ளதாகவும்—

அவ்வளவு மாவும் இன்றும், நாளையும் இறக்கி முடிக்கப்படும் பட்சத்தில் நாளை மாலையே வாதுவ கொழும்பு திரும்பும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதே வேளை —

கொழும்பில் தரித்து நிற்கும் ''குமண'' கப்பலில் பொருள்கள் ஏற்றும் வேலை தாமதமாவதால் அந்தக்கப்பல் இவ்வார இறுதியிலேயே இங்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3

# வடபகுதி நிலைக்குகாரணம் அன்றைய அரசியல்வாதிகள்

## இப்படிச் சொல்கிறார் காமினி

கொழும்பு. மே 10

''வடபகுதி மக்களின் அபிலாஷைகள் அன்று நிறைவேற்றப்பட்டிருப்பின் இன்று ஈழக் கோரிக்கையை அவர்கள் முன் வைத்திருக்கமாட்டார்கள். அரசியல்வாதிகள் அன்று விட்ட பிழைகளினால் தான் இன்று வடக்கில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.''

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவர் காமினி திஸநாயக்கா இவ்வாறு கூறியுள்ளார்;

எல்பிட்டியில் நடந்த மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''இன்றைய அரசாங்கம் இளைஞர்களை யுத்தத்திற்கு அனுப்புவதன்மூலமும் ஆடைத்தொழிற்சாலைகள் மூலமும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து விடலாம் என்ற கொள்கையுடன் செயல்படுகின்றது'' என்றும் அந்தக் கூட்டத்தில் அவர் கூறினார்.

# 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்; முன்னோடிப் பரீட்சை நடக்கும்?

## கல்வி மேம்பாட்டுப் பேரவை ஆலோசனை

யாழ்ப்பாணம், மே 10

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு - அந்தப் பரீட்சை நடைபெறுவதற்கு முன்பாக - முன்னோடிப் பரீட்சை ஒன்றை நடத்த தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை ஆலோசித்து வருகிறது—

இணுவிலில் நடந்த மணி விழாவில் பதிலுரை ஆற்றிய யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் இத்தகவலை வெளியிட்டார்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் புரியும் சாதனை என்பது இரண்டு பாடங்களில் மட்டும் அவர்களுக்கு அளிக்கப்படும் தீவிர பயிற்சியினாலே ஏற்படுகிறது என்றும்—

ஏனைய பாடங்களில் அவர்களின் திறனை மதிப்பீடு செய்ய முன்னோடிப் பரீட்சை உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த-5)

# மூளை காய்ச்சலுக்கு பலி

தென்மராட்சி, மே 10

மூளைக்காய்ச்சலுக்கு இளம் குடும்பஸ்தர் பலியான சம்பவம் ஒன்று அண்மையில் வரணி வடக்கு கறுக்காய்ப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி சந்திரன் (வயது 23) என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார். (த-117)

# திருட்டு

யாழ்ப்பாணம், மே 10

தோட்டத்தில் இறைத்துக் கொண்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை பட்டப் பகலிலேயே, இனந்தெரியாத திருடர் அபகரித்துச் சென்றனர்.

சண்டிலிப்பாயில் கடந்த வெள்ளி நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது (த-15)

# போசாக்கின்மை போக்க அல்கா கடல் பூண்டு

## விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

வெப்பப் பிரதேசங்களில் உள்ள ஏரிகளில் வளரும் சின்னஞ்சிறிய நீல — பச்சை நிற ''அல்கா'' [Alga] என்ற கடல் பூண்டு வறிய நாடுகளில் போசாக்கின்மையைப் போக்க உதவ முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

மொனாகோவில் அண்மையில் நடைபெற்ற ''ஸ்புறுலினா'' (Sprulina என்று அழைக்கப்படும் ''அல்கா'' கடல்பூண்டு பற்றிய மாநாட்டில இவ்வாறு தெரிவிக்கப்பட்டது

''ஸ்புறுலினா'' கடல் பூண்டில் சுமார் 65 சதவீத உயர்ந்த தரப் புரதச் சத்து உள்ளது எனவும் அது விற்றமின்கள், கனிப உப்புகள் நிறைந்தது எனவும் காணப்பட்டுள்ளது

இலேசாகச் சீரணிக்கக் கூடிய இந்த உணவைத் தினமும் ஒரு பெரிய தேக்கரண்டி அளவு எடுத்தாலே போதும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்

அமெரிக்காவின் உயிரியல் விஞ்ஞானியான றிப்ளி பொ(F)க்ஸ் என்பவரும் அவருடைய மனைவியும் 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பூண்டு பற்றி ஆராய்ச்சி நடத்தி மூன்றாவது உலக நாடுகளின் போசாக்குக் குறைந்த குழந்தைகளுக்கு இந்த உணவு கிடைக்க வழிவகை காண பாடுபட்டுள்ளனர்.

வசதி குறைந்த மக்கள் வாழுகின்ற கிராமங்களில் இந்தப் பூண்டை வளர்க்க ஊக்குவிக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர் இந்த அமெரிக்கக் கணவனும் மனைவியும் மாதிரிப் பண்ணைகளை இந்தியா, செனகல், தோகோ ஆகிய நாடுகளில் அமைத்துள்ளனர்

அவர்கள் மனித மலத்தைச் சேர்த்து ''அல்கா'' வளரும் குளங்களுக்கு அனுப்புகின்றனர்: மலம் நொதித்து ''அல்கா''வுக்கு நைதரசனையும் வயல்களுக்குத் திரவப் பசளையையும் சமையல் செய்வதற்கு மீதேன் வாயுவையும் அளிக்கின்றது. இதனால் மரங்களைத் தறிப்பதைத் தவிர்க்க முடியும்.

''ஸ்புறுலினா''ப் பூண்டு புற்றுநோயைத் தடுக்க உதவும் எனவும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் எனவும் உடல் இழையங்கள் மூப்படைவதைத் தாமதப்படுத்தும் எனவும் பொ(F)க்ஸ் தம்பதியர் நடத்திய ஆராய்ச்சிகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது. (அ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வீரபத்திரன் சிவகுமாரன்

யாழ்ப்பாணம், இல. 06, காதி அபூபக்கர் வீதியைச் சேர்ந்த செல்வன் வீ. சிவகுமாரன் 09-05-1993 ஞாயிறு காலமானார். அன்னார் பொ. வீரபத்திரன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி), இராஜேஸ்வரி ஆகியோரின் அருமை மகனும், திருமதி சு. குமுதினியின் அன்புச் சகோதரனும், Dr. க. சுந்தரலிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அருமை மைத்துனரும், காலஞ்சென்ற தெ. பொன்னம்பலம், காலஞ்சென்ற பொ மாணிக்கம், ஆகியோரதும், காலஞ்சென்ற க. சின்னத்துரை, சி. மீனாட்சி ஆகியோரதும், திரு. கு. செல்லையா, திருமதி செ பராசக்தி ஆகியோரது அன்புப் பேரனும், திரு. பொ. கோபாலபிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்) திரு. பொ. நெல்லிநாதர் (ஓய்வுபெற்ற கூ. பரிசோதகர்), திரு.பொ.கங்காதரம்பிள்ளை (கங்கா போட்டோ- கோண்டாவில்), திருமதி இ. லோகேஸ்வரி ஆகியோரது பெறாமகனும், திருமதி ச. பராசக்தி (கிளி)யின் மருமகனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (10-05-1993) திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு நடைபெற்று, தகனத்திற்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. கிருஷ்ணானந்தன், (சிறிய தந்தை)
இல. 06, காதி அபூபக்கர் வீதி.
யாழ்ப்பாணம்.
(25597)

## திருமதி தம்பையா வள்ளிப்பிள்ளை

மாவிட்டபுரம் சங்கோலையை பிறப்பிடமாகக் கொண்டவரும், குமாரகோட்டம் கோண்டாவிலில் வசித்தவருமாகிய காலம்சென்ற தம்பையாவின் மனைவி வள்ளிப்பிள்ளை (செல்லம்) காலமாகிவிட்டார். இவர் திருநாவுக்கரசு (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), சங்கரப்பிள்ளை (வான் செய்தித் தொடர்பு உத்தியோகத்தர், ரத்மலானை விமான நிலையம்), சோதிப்பிள்ளை, அழகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் இரத்தினம் (லங்கா சிமென்ற் லிமிட்டெட்), அன்னலட்சுமி, அற்புதமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவிச்சந்திரன் (சவுதி), ரஜனி, ராகினி, சுகந்தினி, ரவீந்திரன், அமுதினி, சிவாகரன், வசந்தன், வாசுகி, வாசினி, மதிவதனி, மலர்வண்ணன், மனோகரன், சிவாஜினி, சுபேந்திரன், இன்பலதா, இன்பரூபி, இன்பமோகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-05-93) திங்கட்கிழமை குமாரகோட்டம் கோண்டாவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2-00 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
த. திருநாவுக்கரசு (மகன்).
கோண்டாவில் மேற்கு.
(25598)

## திருமதி அற்புதம் மார்க்கண்டு

இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அற்புதம் மார்க்கண்டு (இளைப்பாறிய உப அதிபர்) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் க. மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி பறுவதம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், முருகானந்தன் (அவுஸ்திரேலியா), கிருபானந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராகினி (அவுஸ்திரேலியா), ஜமுனா (அமெரிக்கா) ஆகியோரின் மாமியாரும், சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), தையல்நாயகம், திருமதி பங்கயலஷ்மி சித்தானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சித்தானந்தனின் மைத்துனியும், கபிலன், ஜனார்த்தன், அனுஜீதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-05-93 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
இ. சித்தானந்தன்
V. H. லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(25402)

## டாக்டர் சின்னத்தம்பி தம்பித்துரை
## (தங்கராசா)

டாக்டர் சின்னத்தம்பி தம்பித்துரை (தங்கராசா) காலமானார் நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வடலியடைப்பை வசிபபிடமாகக் கொண்டவரும், தற்சமயம் வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டையில் வசித்தவருமாகிய இவர், கலாதேவியின் அன்புக் கணவரும், டாக்டர் ஸ்ரீதரன், இரமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹம்சினியின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (10-5-93) திங்கட்கிழமை வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை மாவடிச்சந்திக்கருகில் இருக்கும் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. திருஞானம்
வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.
(25401)

## இன்று

யாழ்ப்பாணம், மே 10

கம்பர்மலை பாரதி சனசமூக நிலைய வெளியீடான ''தமிழோசை'' சஞ்சிகையின் முதலாவது வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறும்.

உடுப்பிட்டி கொத்தணி அதிபர் திரு. ந. அனந்தராஜ் வெளியீட்டுரையும், சிறப்புரையும் நிகழ்த்துவார்.

(உ-3)

o o o

சுதுமலை வடக்கு நாமகள் சனசமூக நிலைய பாலர் பாடசாலைக்கு தளபாடங்கள் கையளிக்கும் வைபவம் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

நிலையத்தினரால் நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு மூலம் பெற்ற நிதியில் இருந்தும், நிலைய நிதியில் இருந்தும் இந்த தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## 500 கைதிகள் விடுதலை

ஜனாதிபதியாக திரு, விஜேதுங்க பதவியேற்றதைத் தொடர்ந்து 500 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர்.

மற்றைய சிறைக் கைதிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனை வருடத்துக்கு மூன்று வாரங்கள் என்ற அடிப்படையில் குறைக்கப்பட்டுள்ளது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் தண்டனைக் காலம் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளது. (த-எ)

## ஈழத்தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மத்தியில் உள்ள தீயசக்திகள் குறித்துத் தகவல்களைத் தரவேண்டும். அவை இரகசியமாகப் பேணப்படும். தீயசக்திகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்காக ஒத்துழைக்க வேண்டும் வழக்கு விசாரணைகளின்போது சாட்சியம் அளிக்க முன்வரவேண்டும்'' — இவ்வாறு கனேடிய பொலீஸார் அக்கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழர்களைக் கோரினார்கள்.

கடந்த 5 ஆம் திகதி கனடாவில் இலங்கைத் தமிழர்களின் இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் இலங்கைத் தமிழர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம், அராலியைச் சேர்ந்த சிட்டிபாபு என்றழைக்கப்படும் நமசிவாயம் சிவப்பிரகாசம் (27 வயது) என்ற இளைஞரே கொல்லப்பட்டவர் ஆவார்.

தொடரும் கோஷ்டி மோதல்களும், கொலைகளும் கனேடிய பொலீஸாரை தீவிர நடவடிக்கைக்கு தூண்டியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

## லலித், பிரேமா..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் இயக்கமே பயன் அடைந்திருக்கும் என்றும் சிரேஷ்ட அதிகாரிகள் கூறினர்.

இவ்வெறிச் செயல்கள் கொழும்பில் நடைபெறுவதையே விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்பியது.

கொழும்பில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதையும் இவர்கள் கவனிக்கவில்லை. கொழும்பில் குழப்பமேற்பட்டிருந்தால் விடுதலைப் புலிகளுக்குச் சர்வதேச ரீதியில் ஆதரவு பெருகியிருக்கும். தேவையான அளவு நிதி பெற வாய்ப்பும் கிடைத்திருக்கும் என்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் எதிர்பார்த்தபடி கொழும்பில் குழப்பம் ஏற்பட்டிருந்தால் இந்தக் குழப்பம் 1983 இனக் கலவரத்தின் பத்தாண்டு நிறைவுச் சம்பவமாகக் கொள்ளப்பட்டிருக்கும். மேற்கு நாடுகளின் தொடர்புச் சாதனங்கள் இச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருக்கும் என்றும் அவர் கூறினார்.

— இவ்வாறு 'தினகரன்' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-எ)

# இருவருக்கு மரணதண்டனை

யாழ்ப்பாணம், மே 10

கடந்த வருடம் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி தாவடியைச் சேர்ந்த நவரட்ணராஜா சுதர்சன் என்பவரை கொலை செய்த குற்றம் தொடர்பாக நடராஜா தயானந்தன் (கோண்டாவில்), சிவகுருநாதன் குகநேசன் (கொக்குவில்) ஆகிய இருவருக்கும் நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

நேற்றுக் காலை தாவடிச் சந்தியில் வைத்து சிவகுருநாதன் குகநேசனுக்கும், கோண்டாவில் சந்தியில் வைத்து நடராஜா தயானந்தனுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

நவரட்ணராஜா சுதர்சனை கொலை செய்து, அவரது உடலை ஸ்கூட்டரில் வைத்து இருத்தி — உயிருள்ளவரைப் போல பிடித்துச் சென்று—

நாவற்குழி கேரதீவுப்பாதையில் ஆயிலியப்பிட்டி மயானக் கிணற்றில் போட்டதாக மேற்படி இருவர் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ-உ-3)

## நெல் உத்தரவாத விலை உயர்வு

# கிராம பாடசாலைகளுக்கு உடன் ஆய்வுகூட வசதி

கொழும்பு, மே 10

ஜனாதிபதி விஜேதுங்கா தான் பதவியேற்றதைத் தொடர்ந்து அரசாங்க ஊழியர், ஓய்வூதியர்கள், விவசாயிகள், பட்டதாரிகள், மாணவர்கள ஆகிய ஐந்து தரப்பாருக்கும் சில சலுகைகளையும் ஊக்குவிப்புகளையும் நேற்று அறிவித்தார்.

விவசாயிகளின் நன்மை கருதி ஒரு புசல் நெல்லின் உத்தரவாத விலையை 136 ரூபாவில் இருந்து 155 ரூபாவாக உயர்த்தினார்.

அரிசி, பருப்பு, மிளகாய், வெங்காயம் ஆகிய உற்பத்திப் பொருள்களுக்கு இறக்குமதித்தடை விதிக்கவும் உத்தரவிட்டார்.

பாடசாலை மாணவர்களைப் பொறுத்தமட்டில் சகல கிராமப் பாடசாலைகளிலும் உடனடியாக ஆய்வுகூட வசதிகள் செய்யுமாறும் பணிக்கப்பட்டது. (அ-எ)

## பூநகரிப் பாதை விவகாரம்:

# ஐ. நா. தூதரக அதிகாரி யாழ். வருவது தாமதமாகும்

யாழ்ப்பாணம், மே 10

கேரதீவு - சங்குப்பிட்டி பாதையை திறப்பது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேசுவதற்காக யாழ்ப்பாணம் வரவிருந்த, அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி பீற்றர் நிக்கொலஸின் யாழ். விஜயம் தாமதமாகியுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்டதால், பூநகரிப் பாதை விடயமாக புதிய ஜனாதிபதி விஜேதுங்காவுடன் பேச வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாம்.

அதன் காரணமாக ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்துப் பேசிய பின்னரே கலாநிதி நிக்கொலஸ் யாழ்ப்பாணம் வருவார் என்று அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-3)

## ஜனாதிபதி பிரேமா கொலை:

# படையினருக்கு ஏற்பட்ட பெரும் வெட்கக்கேடு!

லண்டன், மே 10

ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலை அவரது பாதுகாப்புப் படைக்கு உண்மையில் பெரும் வெட்கத்தை அளிப்பதாகும்.

இவ்வாறு கொழும்பில் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதிக்கு நெருக்கமாக 22 சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளனர். 45 இன்ஸ்பெக்டர்கள், 300 பொலீஸார் கொண்ட தனிப்பாதுகாப்புப் படை ஜனாதிபதிக்கு உள்ளது.

இந்தப் படைகளின் கட்டுக்காவலையும் மீறி கொலையாளி ஜனாதிபதிக்கு ஐந்தடி தூரம் வரை அருகில் வந்து குண்டை வெடிக்க வைத்திருக்கிறான்.

இது உண்மையில் பெரும் வெட்கக்கேடான விடயம் என்று சிரேஷ்ட அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதி பிரேமா மற்றும் லலித் கொலைகளுக்கு இரு தமிழர்கள் மீது பொலீஸார் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

ஆனால் கொலைகளுக்கு அவர்கள்தான் காரணம் என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் எதையும் அவர்கள் கண்டுபிடித்தார்களா என்பது தெரியவில்லை.

இக்கொலைகளுக்கும் தங்களுக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை என்று புலிகள் அடியோடு மறுத்தும் இருப்பது கவனிக்கத்தக்கது.

— இப்படி அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வெளிநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது. அப்போது வெளிநாட்டில் இருந்த இந்தியர்கள் பலர் இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.

மற்றையது ஜனாதிபதி பிரேமதாஸா கொலையுண்டபோது இடம்பெற்றது. இலங்கை மக்கள் வெடி கொளுத்தி மகிழ்ந்தனர். — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## பிரம்மஸ்ரீ நீலகண்டக்குருக்கள் சச்சிதானந்தீஸ்வரக்குருக்கள்

(ஆதீன கர்த்தர்—வெள்ளெருவைப் பிள்ளையார்- கோவில், கோப்பாய்)

பிரம்மஸ்ரீ நீலகண்டக் குருக்கள் சச்சிதானந்தீஸ்வரக் குருக்கள் (இளைப்பாறிய ஆசிரியர், அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி) 09-05-1993 ஞாயிற்றுக் கிழமை காலை 9-45 மணிக்கு காலமாகி விட்டார். அன்னார் இராஜஇராஜேஸ்வரியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-05-1993 மாலை கோப்பாய் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.
வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில்,
கோப்பாய் வடக்கு.
(25599)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/[illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10-05-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org